# பண்மகள்

PANMAGAL பண்மகள்

இதழ் : 02 ஜனவரி – மார்ச் 2008 அன்பளிப்பு : 10ரூபா


## 185ஆவது ஆண்டு நிறைவு

# கொடிமாதத்துடன் கொண்டாட்டங்கள் ஆரம்பம்




இவ்வாண்டு பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை வடமாகாணத்தின் மூத்த பெண்கள் பாடசாலைகளுள் ஒன்றாகத் தன்னை நிலைநிறுத்தி 185ஆவது ஆண்டைப் பூரிப்புடன் நிறைவு செய்துள்ளது. இவ் வாண்டு நிறைவைப் பாடசாலைச் சமூகம் பெருமை யோடு அதேவேளை எளிமையாகக் கொண்டாடுகிறது. இதற்கெனப் பாடசாலை அதிபர் தலைமையில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.



அவ்வகையில் ஜனவரி மாதத்தில் கொடிமாதம் அனுட்டிக்கப்படுகிறது. பழைய மாணவிகளிடத்திலும் அயற் சமூகத்திலும் பாடசாலையின் 185ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஜனவரி மாதத்தில் கொடி விற்பனை இடம்பெறுகிறது. பாடசாலையின் கீர்த்தியைப் பறைசாற்றும் வகையில் மேலும் பல செயற்திட்டங்கள் மாதாந்தம் இடம்பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பழைய மாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் 185ஆவது நிறைவு நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றிணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

# பண்மகள்

காலாண்டிதழ்

**ஆலோசனை**
திருமதி கி. சிவராஜா
(அதிபர்)

**பிரதம ஆசிரியர்**
திரு. சு. ஸ்ரீகுமரன்

**இணையாசிரியர்**
திருமதி F.R.J. ஜெயந்தன்

**ஆசிரியர் குழு**
திருமதி தி. கருணீசன்
செல்வி கௌ. இராசதுரை
திரு. பொ. அமிர்தலிங்கம்

**கணனி வடிவமைப்பு**
திரு ச. விக்கினேஸ்வரன்
செல்வி பா. நிதர்சினி

**அச்சுப் பதிப்பு**
J.S. பிறின்டேர்ஸ்
பண்டத்தரிப்பு

**வெளியீடு**
பண்டத்தரிப்பு
பெண்கள் உயர்தர
பாடசாலை


# தலைவாசல்


தனது நோக்கங்களை முன்னிறுத்தி, பல சவால்கள் மத்தியில் தொடங்கப்பட்ட பண்மகளின் முதலாவது இதழுக்குக் கிடைத்த வரவேற்பு எம்மை மகிழ்வுறச் செய்துள்ளது. கல்வியியலாளர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். தினக்குரல் பத்திரிகை பண்மகளை அறிமுகப்படுத்திப் பெருமைப் படுத்தியது. உதயன் பத்திரிகை பண்மகளின் மூன்று கட்டுரைகளைப் பிரசுரித்துக் கௌரவப் படுத்தியது.

பொது அறிவுப் போட்டியில் வேறு பாடசாலைகளிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றியுள்ளனர். வரவேற்கிறோம். தொடர்ந்தும் பங்குபற்றுங்கள். ஆயினும் வேறு பாடசாலை மாணவர்களின் ஆக்கங் களைத் தற்போதைய நிலையில் பிரசுரிக்க முடியாதுள்ளது. எமது பாடசாலை மாணவர் களுடைய ஆக்கங்கள் மட்டுமே பிரசுரிக்கப் படும். காலப் போக்கில் பக்கங்கள் அதிகரிக்கப்படும் போது உங்களையும் உள்வாங்குவோம்.

பாடசாலை 185ஆவது அகவையை நிறைவு செய்த புளகாங்கிதத்துடன் எமது செயற்பாடுகளை உத்வேகப்படுத்துவோம். க.பொ.த. உயர்தர மாணவர்களின் பெறுபேறுகள் மகிழ்வைத் தருகின்றன. அத்தடத்தில் மேலும் முன்னேறி எமது பாடசாலையின் கல்வித் தரத்தை உயர்த்த இவ்வாண்டில் உறுதி பூணுவோம்.

-பிரதம ஆசிரியர்-

# உலகமயமாக்கம்



பொருளாதார வணிகச் செயற்பாடுகளில் உலக நாடுகளிடையே நிலவிய பல்வேறு தடைகளும் கட்டுப்பாடுகளும் தகர்க்கப்பட்டு உலக நாடுகள் எல்லாவற்றினையும் ஒரே சந்தை அமைப்பாகக் கருது கின்ற புதிய போக்கு உலகமயமாக்கம் அல்லது பூகோள மயமாக்கம் என அழைக்கப்படுகின்றது.

அதாவது உலகமே சந்தை என்ற அடிப்படையில் வணிகத் தடைகள் நீக்கப்பட்டுத் தொழிற்படும் வணிகச் சூழ்நிலை உலகமயமாக்கல் ஆகும். இந்த உலகமயமாக்கல் கொள்கையினால் ஒருவர் தன்னுடைய தேவை விருப்பத்திற்கேற்பப் பொருட்களை உலகின் எப்பகுதியிலிருந்தும் பெறலாம்.

கடந்த இரு தசாப்தங்களாக உலகப் பொருளாதார தொழிநுட்ப மாற்றங்களினாற் பல முன்னேற்றங்கள், புரட்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது உலகமயமாக்கல் என்பதாகும். இலத்திரனியல் தொடர்பாடல்களின் வளர்ச்சியினால் உலகமே ஒரு பூகோளக் கிராமமாக மாறியுள்ளது. இந் நிலைமை தகவல் முறைமைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. புதிய மென்பாக உற்பத்திப் பொருட்களின் அறிமுகம், நவீன வியாபார அமைப்புக்களின் விருத்தி என்பன தகவல் முறைமையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன

### உலகமயமாக்கல் ஏற்பட்டமைக்கான காரணங்கள்.

1) தொடர்பாடலில் ஏற்பட்ட முன்னேற்றம்
2) தொழிநுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்.
3) போக்குவரத்து துறையில் ஏற்பட்ட முன்னேற்றம்
4) பேரளவு உற்பத்திக்கு வழிவகுத்த சூழல்
5) உலக வர்த்தக அமைப்பு (W.R.D)உருவாக்கமும் அதன் செயற்பாடுகளும்.

### உலகமயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய நல் விளைவுகள்.


1) பல்வேறு வகையான பொருட்கள் சேவைகளை மக்கள் நுகரலாம்.
2) பரந்த சந்தை பாய்ப்புக் கிடைக்கும்.
3) சர்வதேச தொடர்புகள் அதிகரிக்கும்.
4) நாட்டின் வளங்களின் கேள்வி அதிகரிக்கும்.
5) வெளிநாட்டு முதலீடுகள் அதிகம் வந்தடையும்.
6) நவீன தொழிநுட்பங்கள் வந்து சேரும்.
7) தரம் மேம்படும்.

## உலக மயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

1) தேசிய உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும்.
2) ஏனைய நாடுகளில தங்கியிருக்கும் தன்மை அதிகரிக்கும்.
3) தேவையற்ற பொருட்கள் உள்நாட்டுக்குள் வந்துசேரும்.
4) சமூக கலாசார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.
5) சர்வதேசப் போட்டி அதிகரிக்கும்.
6) ஆரம்ப நிலையிலுள்ள கைத்தொழில்கள் பாதிப்படையும்.
7) தேசிய வளங்கள் சர்வதேச வியாபாரத்திற்கு உட்படுத்தப்படும்.
8) வீழ்ச்சியடைந்து செல்லும் சூரிய அஸ்தமனத் தொழில்நிலைமை. இது விரைவாக வீழ்ச்சியடைய நேரிடுவதனால் வேலையின்மை அதிகரிக்கும்.

**நா.யாழினி**
2008 உ.த(வர்த்தகம்)

## வெள்ளைப் பிரம்பு தினம்



விழிப்புலன் இழந்தவர்களுக்கு வழிகாட்டியாக அமைவது வெள்ளைப் பிரம்பாகும். வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக ஆண்டு தோறும் ஒக்ரோபர் 15 ஆந் திகதியை வெள்ளைப் பிரம்பு தினமாகக் கொண்டாடுவார்கள்.

ஒக்ரோபர் 15 ஆந் திகதியன்று சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தைச் சேர்ந்தோர் எமது பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து வெள்ளைப் பிரம்பு தினத்தைக் கொண்டாடினர்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வாழ்வக நிர்வாக சபை உறுப்பினர் திரு ச.சிவகுமார், வாழ்வக மாணவன் செல்வன் யோ.சுதாகரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். செல்வன் கு. ஜெகதீசன், செல்வி கி.ரேகா ஆகியோர் இன்னிசை மழையால் அனைவரையும் மகிழ்வித்தனர். தொடர்ந்து ஆசிரிய நலன்புரிக் கழகத்தினர் தேநீர் விருந்தளித்து பரிசுப் பொருள்களை வழங்கி வாழ்வக மாணவர்களைக் கௌரவித்தனர்.

## "பெண்களுக்கு வேண்டாத மை கள்"



"மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" மாதவம் செய்து பெற்ற அரிய பிறப்பைப் பெற்ற மங்கையர்களே! இயல்பாகவே நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் திகழும் உங்களிடம் அன்பு, ஆதரவு, இன்சொல், ஈகை, உண்மை, ஊக்கம், எளிமை, ஏற்றம், ஐக்கியம், ஒழுக்கம், ஓம்புதல் போன்ற உயரிய பண்புகள் உறைந்துள்ளன. உங்களின் தனித்துவம் மேலும் மேன்மையுற சில தீய குணங்கள் அணுகாது காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அணுகாது தவிர்க்க வேண்டியன:-




அறியாமை, அடக்கமின்மை, கல்லாமை, மடமை, பொறாமை, பொல்லாமை, பொய்மை, தனிமை, தற்பெருமை, சிறுமை, கடுமை போன்ற மைகள் உங்களை எக்காலத்திலும் அரவணைக்காது காத்தீர்களானால் என்றும் இன்புற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்வீர்கள்.

**திருமதி. அ. ஈஸ்வரன்.**

## றோசாப்பூ


சின்னச் சின்ன றோசாப்பூ
சிவப்பு வெள்ளை றோசாப்பூ
வண்ண வண்ண றோசாப்பூ
வாட்டமில்லா றோசாப்பூ
வட்டமான றோசாப்பூ
வளர்ந்து நிற்கும் றோசாப்பூ
பட்டுப் போன்ற றோசாப்பூ
பார்த்து மகிழும் றோசாப்பூ
இனிய காலை நேரம்
இதழ் விரித்துச் சிரிக்கும்
பனிமணிகள் கூடி
பளபளக்கும் கண்ணில்
முள்ளு வேலிக்குள்ளே
முகத்தைக் காட்டும் றோசாப்பூ



**செல்வி ப. அபினா**
தரம் - 4

# பறவை என்ன சொன்னது?


ஒரு வேட்டைக்காரன் வலை போட்டு ஒரு பறவையைப் பிடித்து விட்டான். அப்பொழுது அந்தப் பறவை அவனைப் பார்த்து "நீ எத்தனையோ ஆடுகளையும் மாடுகளையும் கொன்று தின்றவன். அப்படித் தின்றும் உன் பசி தீரவில்லை. இருந்தும் என்னைக் கொன்று சாப்பிட நினைக்கிறாயே! என் உடம்பில் உள்ள சதை உனக்கு எந்த மூலைக்கு? என்னை விட்டுவிடு. நான் உனக்கு மூன்று உபதேசங்கள் செய்கிறேன். நீ அவற்றைக் கடைப்பிடித்தால் அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வரும்" என்றது. அதைக் கேட்ட வேடன் "சரி சொல் பார்ப்போம்" என்றான்.



"நான் கொஞ்ச நாள்கள் ஒரு முனிவரின் ஆசிரமத்தின் அருகில் கூடுகட்டி வசித்து வந்தேன். அவர் தன்னுடைய மாணவர்களுக்குக் கூறிய உபதேசங்கள் தான் இவை" என்றது பறவை.

"சரி உன் உபதேசத்துக்காக உன் உயிரை உனக்குத் தானமாகத் தருகிறேன்" என்றான் வேடன்.

" இதோ முதல் உபதேசம் யார் சொன்னாலும் சரி அபத்தத்தை நம்பாதே" என்றது பறவை. முதல் உபதேசத்தை செய்துவிட்டு அந்தப் பறவை அவன் கையிலிருந்து பறந்து போய் வீட்டுக் கூரையில் உட்கார்ந்தது. உடனே இரண்டாவது உப தேசத்தைச் செய்தது.



"போனதை நினைத்து வருந்தாதே. உன் சக்திக்கு உட்படாமல் போய்விட்டதை நினைத்து அழுது என்னபிரயோசனம்?" என்று சொன்ன பறவை என் உடம்பினுள் ஒரு பெரிய வைரம் இருக்கிறது. அது மட்டும் உன்னிடம் இருந்தால் நீயும் உன் குழந்தையும் கோடீஸ் வரர்களாக வாழலாம். ஆனால் அது உனக்குக் கிடைக்கப் போவ தில்லை. ஆண்டவன் உனக்கு அந்தப் பாக்கியத்தைக் கொடுக்க வில்லை" என்று கூறியது. வேட்டைக்காரன் தன் துர்ப்பாக் கியத்தை நினைத்து அழுது புலம்பினான்.

"போனதை நினைத்து வருந்தக் கூடாது என்று சொல்லியும் நீ அழுகிறாயே! என் உபதேசம் உனக்குப் புரியவில்லையா? அல்லது நீ செவிடனா? அபத் தத்தை மறந்து விட்டாய்..... என்னுடைய சின்னஞ் சிறு உடம்பினுள் பெரிய வைரக் கல் எப்படி இருக்க முடியும்?" என்று கேட்டது பறவை.

**சு.பாலமுரளிதரன்**
தரம் - 4

அவனுக்கு அப்போதுதான் புத்தியில் தெளிவு பிறந்தது. "உன்னுடைய மூன்றாவது உபதேசம் என்ன?" என்று கேட்டான் வேட்டைக்காரன். "நான் செய்த இரண்டு உபதேசங் களையும் நீ முதலில் சரிவரக் கடைப்பிடித்து வா. பின்பு உனக்கு மூன்றாவது உபதேசத்தையும் செய்கிறேன்." என்று சொல்லிவிட்டுப் பறந்து போய்விட்டது பறவை.

முனிவர் வீட்டுக்கு அருகில் குடியிருந்ததால் அவரது உப தேசங்கள் மூலம் தான் உயிர் பிழைத்ததை எண்ணி மகிழ்ந்தது பறவை.

"எப்போதும் நல்லவர்களுடன் நட்பு வைத்துக்கொள்ள வேண்டும்".

❑❑



புதிதாக இணைந்த சிறு தோழருக் கான சின்னஞ்சூட்டும் விழா திருமதி பி. தர்மபாலன் தலைமையில் 05-12-07 அன்று நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபரும், வட மாகாண பெண் சாரணிய ஆணை யாளருமான திருமதி கி. சிவராஜா கலந்து கொண்டு சின்னங்களை அணிவித்தார்.




புதிதாக இணைந்த பெண் சாரணியர் களுக்கான சின்னஞ்சூட்டும் விழா திருமதி F. R. J. ஜெயந்தன் தலைமையில் 05-12-07 அன்று நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபரும், வடமாகாண பெண் சாரணிய ஆணையாளருமான திருமதி கி. சிவராஜா கலந்து கொண்டு சின்னங்களை அணிவித்தார்.

# ஆசிரியர்

"செய்யும் தொழிலே தெய்வம்" என்ற கூற்றுக்கிணங்க மாணவ சமுதாயத்திற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்த ஆசிரியர்கள் தங்கள் கடமையைத் தமது உயினும் மேலாக நினைத்து தொண்டு புரிகிறார்கள். கல்வியின் உயர்ச்சிக்காக மட்டுமல்ல மாணவர்களின் ஒழுக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தோன்றாத் துணையாய் விளங்கு கிறார்கள்.

எனது வகுப்புக்கு மட்டுமல்ல பாடசாலையில் உள்ள எந்தெந்தப் பிரிவு வகுப்புக்களுக்கு ஆசிரியர்கள் நுழைகின்றார்களோ அங்கு சோர்ந்துபோன மாணவர்கள் எல்லோரும் உற்சாகத்துடன் நிமிர்ந்திருப்பார்கள். காந்தி மகான் கத்தி இன்றி இரத்தம் இன்றி அஹிம்சை யுத்தம் மேற்கொண்டது போல எங்கள் ஆசிரியர்கள் தடியும் இன்றி பொல்லும் இன்றி தங்கள் அன்பான ஆதரவான வார்த்தைகளால் எம்மை எல்லாம் சிறந்த மாணவர்களாக்கு கின்றனர் அறிவுக் கடலில் மூழ்கி அரிய சீரிய கருத்துக்களை எல்லாம் அள்ளி செந்தமிழில் வழங்கி எமக்கு கல்வி புகட்டு வார்கள். அறிவை மட்டுமல்ல ஒரு மாணவி முழு நிறைவு அடை வதற்கும், அவள் அவ்வப்போது கடைப்பிடிக்க வேண்டியவை பற்றியும் கூறுவார்கள். மற்றவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்ற கருத்தையெல்லாம் விளக்கமாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட ஒரு ஆசிரியர் குழாத்தினரை நாங்கள் நேசிப்பதில் குற்றமேதுமில்லை.



குருவே தெய்வம், குருவே தேவர், குருவே பிரமா, குருவே விஷ்ணு என்று நம் மூதறிஞர் கூறிய கருத்தும் எமது ஆசிரியர் கூட்டத்தினருக்குக் சிறப்பாகப் பொருந்தும். மாணவர்களிடையே உள்ள ஆர்வத்தை வளர்த்து தமிழில் அவர்களுக்குள் விரிந்து கிடக்கும் எண்ணக் கருத்தை அதாவது, கவிதை, கட்டுரை, பாட்டு என்றவாறு எல்லாவற்றையும் வளர்க்கின்றார்கள். அது மட்டுமா தமிழை வளர்க்க வேண்டும். மாணவர்கள் எல்லோரும் தமிழ் கல்வி பெற வேண்டும் என்று அயராத முயற்சியுடன் தமிழ் மன்றங்களை அமைத்து

திறம்பட செய்கின்றார்கள். அதில் அவர்கள் வெற்றியும் கண்டார்கள். தமிழைப் போல மாணவர்களை மற்றப் பாடங்களிலும் அக்கறை காட்டச் செய்த பெருமை அவர்களையே சாரும். அது மட்டுமன்றி கல்விச் சுற்றுலா போன்ற அறிவு வளர்ச்சிக்குரிய பல செயற்பாடு களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வார்கள். ஆசான்கள், பேரறிஞர்கள், கல்விமான்கள் என்ற வரிசையில் எமது ஆசிரியர் குழாத்தினர் உன்னத நிலையில் காணப்படுகின்றார்கள். அவர்களின் உன்னத சேவையைப் போற்றிக் கௌரவிப்பதற்கு மாணவ சமுதாய மாகிய நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**இ. அனுசாந்தினி**
**தரம் - 7B**

---

## க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்.

எமது பாடசாலை மாணவிகள் சிறப்பான முறையில் தமது பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**உயிரியல்**

கிந்துஷா ஸ்ரீசெல்வசதீஸ்குமார் 2AB சிவலதாயினி வேதநாயகம் C2S

**வர்த்தகம்**

| | | | |
|---|---|---|---|
| அபிதா இராசதுரை | A2B | டிலக்சனா இராமச்சந்திரன் | 2BC |
| கௌசிகா சுபரத்தினம் | 2BC | விதுர்சனா இராமச்சந்திரன் | 2BC |

**கலை**

| | | | |
|---|---|---|---|
| இமாக்குலேசியா அருளானந்தம் | 2AB | ஜீன்கார்த்திகா அமிர்தநாதர் | 2AB |
| மேனகா தவேந்திரன் | A2B | ஜனநிரோஜினி மரியதாஸ் | A2C |
| லக்சிகா அன்ரன் | A2C | தாரணி நாகராசா | 3B |
| நிஷாந்தினி மனோகரன் | ABS | தட்சாயணி மகேந்திரன் | ABC |
| வினோஜா சபாநாயகம் | ABC | ஜயந்தினி பாலசிங்கம் | ACS |
| சாதனா நாகராசா | ACS | | |

2BC - கஜேந்தினி நகுலேஸ்வரக் குருக்கள், கலைவாணி அலிஸ்ரன், சர்மிலா சந்திரதாசன், நிவேதிதா பொன்னம்பலம்

B2C - ஜஜிதரா சுப்பிரமணியம், கஜேந்திராஜினி தெய்வேந்திரம் , நந்தமாலா குணபாலசிங்கம், சுபாசினி சண்முகராசா, உதயதர்சினி புலேந்திரராசா, மீனதர்சினி புலேந்திரராசா, விதுர்சா கிருஸ்ணதாசன், சிந்துசா கணேசலிங்கம், சௌதிகா கிருஷாந்தினி பிரான்சிஸ், சுகந்தராஜி தம்பிராசா

## சாதனைப் பெண்கள்

# ஃபுளோரென்ஸ் நைட்டிங்கேல்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் நைட்டிங்கேலுக்கும் ஃபோன்னி நைட்டிங் கேலுக்கும் 1820ஆம் அண்டு இரண்டாவது மகளாகப் பிறந்தவரே ஃபுளோரென்ஸ் நைட்டிங்கேல். இவருடைய தாயும், தந்தையும் ஐரோப்பாவில் பல நகரங்கள் சுற்றுப்பயணம் செய்து கொண்டு இருந்தார்கள். இத்தாலியில் பல நகரங்களுக்குச் சென்றுவிட்டு ஃபுளோரென்ஸ் நகரத்திற்குச் சென்ற போதே நைட்டிங்கேல் பிறந்தார். ஃபுளோரென்ஸ் நகரிலே பிறந்த காரணத்தால் புளோரென்ஸ் நைட்டிங்கேல் எனப் பெயர் சூட்டினர்.

ம. சிவகௌரி
தரம் - 10B

வில்லியம் நைட்டிங்கேலும், ஃபேன்னி நைட்டிங்கேலும் அறிவுக் கூர்மை உடையவர்கள். வில்லியம் பணக்காரர். ஃபுளோரென்ஸ் பிறந்து ஓராண்டு முடிய அவர்கள் இங்கிலாந்திற்குத் திரும்பினர். அங்கே விருந்துகளும் விழாக்களும் நடத்தி உல்லாச வாழ்க்கை நடத்தினார்கள். அதற்கென ஒரு மாளிகை கட்டினர். அதில் 15 அறைகள் இருந்தன. ஆனாலும் அம்மாளிகை விருந்தினர் தங்கு வதற்குப் போதவில்லை. எனவே இன்னோர் மாளிகை கட்டினர். அம் மாளிகையில் நாய்கள், பூனைகள், குதிரைகள். பறவைகள் ஆகிய வற்றை வளர்த்தனர்.

நைட்டிங்கேல் வளர்ப்புப் பிராணிகளுடன் விளையாடவோ, குதிரைச் சவாரி செய்யவோ, தோட்டத்தில் உட்கார்ந்து பொழுது போக்கவோ விருப்பம் இல்லாத வளாய் இருந்தாள். நைட்டிங்கேல் எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப் பட்டாள். பிடிவாதம் பிறவிக் குணமாக இருந்தது. அவள் மனதில் வேதனை நிரந்தரமாகக் குடியிருந்தது. பெற்றோர்களின் ஆடம்பர வாழ்க்கையை ஆறு வயதில் இருந்தே அவள் வெறுத்தாள். அவள் தனக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற எண்ணங்களை, உணர்ச்சிகளைத் துண்டுக் காகிதங்களில் எழுதி வைத்துக் கொள்வாள். அவற்றை அவள் பத்திரப்படுத்தியதால் அவளைப் பற்றிய ஏராளமான குறிப்புக்கள் பிற்காலத்தில் கிடைத்துள்ளன.



நைட்டிங்கேல் தன்னுடைய இலட்சிய வாழ்வை நோக்கி முதற்காலடி எடுத்து வைத்தாள். தான் வசித்த ஊரிலேயே வாழ்ந்த ஏழை எளியவர்களைச் சென்று பார்ப்பது, அவர்கள் நிலை குறித்து வருந்துவது, தன்னுடைய தாயிடம் பணம் கேட்டு வாங்கி அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்வது என்று தன் இளவயதிலேயே தொண்டு செய்ய ஆரம்பித்தாள். கிராமத்து நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகள் செய்து வந்தாள்.

அவ்வேளை நைட்டிங்கேல் தனக்கு முறையான தாதிப் பயிற்சி அவசியம் என்பதைப் புரிந்து கொண்டாள். சிகிச்சை செய்வதற்கு பெண்ணாக இருந்தாலே போதும் என்பதே அக்காலத்தில் பொது வாகக் கருதப்பட்டது. இரக்கம், பொறுமை, கருணை ஆகிய குணங்கள் நோயாளிகளைக் குணப்படுத்திவிடும் என்று அவள் எண்ணினாள். நைட்டிங்கேல் ஓர் தாதியாக வேண்டும் என்ற நோக்கத்துடன் மருத்துவ நூல் களையும், சுகாதாரம் பற்றிய அறிக்கைகளையும் படிக்க ஆரம்பித் தாள்.

பாரிஸ் நகரத்திற்குச் சென்று அங்கிருந்த மருத்துவமனைகளைப் பார்வையிட்டாள். வைத்தியர்கள் நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் போது உடனிருந்து அவற்றைக் கவனித் தாள். மருத்துவ மனைகளில் சாதி, மத, இன பேதங்களையும் களைந்தாள். வைத்தியசாலை களில் பலருடைய எதிர்ப்புக் களுக்கு மத்தியிலும் போராடி வெற்றி பெற்றாள். இவள் செவிலியப் பணியிலேயே முத்திரை பதிக்க என போர்க்காலங்களில் போர் முனையிலேயே சென்று காய மடைந்த வீரர்களுக்கும் உடல் நோயாலும், உள்ளத்து நோயாலும் நலிவுற்ற போர்வீரர்களுக்கும் பணி யாற்றினாள்.

இவ்வாறு நோயால் வேதனைப்படும் நோயாளிகளுக்கு தனது சேவையை முழுமையாக வழங்கினாள். “மக்கள் சேவையே மகேசன் சேவை” என்று வாழ்ந்த ஃபுளோரென்ஸ் நைட்டிங்கேல் 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் திகதி இறைவனடி சேர்ந்தாள். இங்கிலாந்தில் பிரதமர்களையும், அரசர்களையும் புதைக்கின்ற வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் அவளது உடலைப் புதைக்க அரசாங்கம் விரும்பியது. ஆனால் தன் இறுதிச் சடங்கை எளிமையாக நடத்த வேண்டும், தனக்கு நினைவுச் சின்னம் எழுப்பக்கூடாது என்று தன் உயிலில் எழுதி வைத்தாள். அதனால் அவளது புதைகுழியில் ஃபுளோரென்ஸ் நைட்டிங்கேல், பிறப்பு 1920. இறப்பு 1910 என்ற வாசகம் பொறித்த கல் மட்டுமே உள்ளது.

பல உன்னத சேவைகளைப் புரிந்த ஃபுளோரென்ஸ் நைட்டிங்கேல் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

# பாடசாலைக்குப் பெருமை சேர்த்தோர்

- எமது பாடசாலையின் A/L 2007 மாணவியான செல்வி மேனகா தவேந்திரன் ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சிறப்புச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

- மாற்று வலுவுள்ளோர் தினத்தையொட்டி வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட போட்டியில் தனி நடிப்பில் செல்வி. பிரான்சிஸ் மேரிஜான் றபேக்கா (A/L 2009) முதலாமிடத்தையும், பேச்சுப் போட்டியில் செல்வி ரஞ்சிதா அலிஸ்ரன் (A/L 2009) முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

- யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கக் கட்டுரைப் போட்டியில் கோட்டமட்டத்தில் செல்வி. சகுந்தலா தம்பிஐயா (A/L 2009) மூன்றாமிடத்தையும், செல்வி. ஜயந்தினி விமலச்சந்திரன் (தரம் 11) இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

- மனைப்பொருளியல் அறிவுப் போட்டியில் செல்வி மேனகா தவேந்திரன் (A/L 2007) கோட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும், வலயமட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளார். இதே போட்டியில் செல்வி தெ. தட்சாயணி (தரம் 11B) கோட்ட மட்டத்தில் நான்காமிடத்தையும் பெற்றுள்ளனர்.


- மனைப்பொருளியல் பாடத்துக்கான அலகு ரீதியான கற்பித்தல் சாதன ஆக்கப் போட்டியில் எமது ஆசிரியை திருமதி அனுஷா ஈஸ்வரன் வலயமட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

- விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் செல்வி. ஜானுஜா திருநாவுக்கரசு (தரம் 11B) கோட்டமட்டத்தில் இரண்டா மிடத்தையும், வலய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளார்.


- வணிகக்கல்வி குறுவினாவிடைப் போட்டியில் செல்வி. டிலக்சனா இராமச்சந்திரன் (A/L 2007) கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். செல்வி. அமீரா தவம் (தரம் 11) கோட்டமட்டத்தில் 4ஆவது இடத்தையும், வலய மட்டத்தில் 3ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

# Flowers



Flowers are many kind
They are dancing in wind
Trees give flowers
We may see them in many colours
Red for rose
White for jasmine
Yellow for Sunflower
Orange for Shoeflower
They bloom with smell
Bees fly with smile
They help to decorate
We may select our favorite
We pray god with flowers
They bloom every days for us.



**T. Januja**
Grade 11B

# பண்மகள் பற்றிய பார்வை

**யாழ். அரசன்**

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கடந்த மாதம் பண்மகள் என்னும் பெயரில் ஒரு காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டுள்ளது. எமது மண்ணில் ஏனைய பாடசாலைகளில் காணமுடியாத ஒரு புதிய முயற்சி இது.


மாணவர்கள், ஆசிரியர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்த்து அவர்களது அறிவுத்திறன்களை விருத்தியாக்குவதே இவ் வெளியீட்டின் நோக்கமெனத் தெரிகிறது. அந்த வகையில் ஆசிரியர்கள், மாணவர்களது பல்துறை ஆக்கங்கள் இம்முதல் இதழினை அணி செய்கின்றன.

பாடக்குறிப்புகளை வழங்குதல், அவற்றை மனனம் செய்தல் என்ற வரையறையுள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறைப்படுத்தப்பட்டுள்ள இன்றைய கல்விமுறை - அதனால் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைக் கருத்திலெடுத்து எதிர்நீச்சல் போட முற்பட்டுள்ள இச்சஞ்சிகை எழுத்தாக்கம், வாசிப்புத்துறையில் ஆசிரியர்கள், மாணவர்களை ஈடுபடுத்த அவாவி நிற்கிறது. அந்த எண்ணத்தில் வெற்றிகாண வேண்டும் என்ற முனைப்பு சஞ்சிகையின் எல்லாப் பக்கங்களிலும் இழையோடியுள்ளது. மாணவர்களது சாதனைகள், பாடப்புறச் செயற்பாடுகள் ஏற்ற முறையில் இடம்பெற்றுள்ளன. இதழாசிரியரது அனுபவ முத்திரை இச் சஞ்சிகையின் வடிவமைப்பில் பளிச்சிடுகின்றது. நல்லதொரு செயற்பாடு. எமது பாராட்டுக்கள்.

**கல்விச்சாளரம், தினக்குரல்**
**02-11-2007**

# The Internet

The Internet is a source of knowledge. It is of very recent origin. However the influence it has on society is immeasurable. The Scope is very wide. It is known the word over. It is easily accessible to everyone.



Knowledge has got a new dimension with introduction of the internet. An internet user has access to a lot of knowledge and information. The internet give us many information in all over the world.

The internet has no weight unlike a book which is heavy. And so with the network there is no bulk. We can get that we want at a click. The language that is most used on the internet is English. The internet was first started as a research project of the Department of Defense of the USA.

The Internet provides an immense source of knowledge through search sites such as google, Wikipedia, yahoo etc. How ever there are certain disadvantages in the internet. No one is responsible for the information or the quality of information. There is no source for this information. There is no authority or authorship responsible.

**S. Saraniya**
Grade 11B

# Role of English

Every country in the world has accepted English Language as a very useful language that helps them improve and increase their knowledge and enrich their lives in many ways.

English Language was described as follow;

"Window to the world" - Jawaharlal Nehru
"a gift by the God" - Rajaji
"a language of world brotherhood and International Understanding - H.G.Wells

English Language takes many major roles

1. As a link language
2. As an international language
3. As Language of trade
4. As Language of mass communication
5. As a second language
6. As a way of obtaining employment
7. As a language for survival in profession
8. As a way for higher education

**Mrs. F.R.J. Jeyanthan**



# பெண் சாரணியம்

இராணுவ வீரரான றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பொவெல் யுத்த முடிவில் சாரணிய எண்ணங்களைச் செயற்படுத்தி, அவை இளைஞர் களுக்கு நன்மையளிக்குமா என அறிய 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பிறௌண்ஸி தீவில் 21 இளைஞர்களுடன் ஒரு பாசறையை நடாத்தினார்.

அது பெருவெற்றியளிக்கவே "இளைஞர் சாரணியம்" எனும் நூலைப் பிரசுரித்ததோடு ஆண்களுக்கான சாரணர் குழாங்களை விஸ்தரித்தார். இந்நூலினால் கவரப்பட்ட பெண்கள் தாங்களும் பெண்குழாங்களாகத் தொழிற்பட்டு 1909ஆம் ஆண்டில் லண்டன் கிறிஸ்டல் மாளிகையில் நிகழ்ந்த சாரண ஒன்று கூடலில் அழையா விருந்தாளிகளாக நுழைந்ததைப் பார்த்த "பொவெல்" தனது சகோதரி அக்னஸின் உதவியுடன் பெண் சாரணியரின் கைநூலை உருவாக்கி 1910இல் பெண்சாரணியத்தை ஸ்தாபித்தார்.

பெண்சாரணியமானது

❋7 - 10 வயதுவரை சிறுதோழர் ❋ 11 - 16 வயதுவரை சாரணியர்

❋ 17 - 23 வயதுவரை சிரேஷ்ட சாரணியர்

❋ 24 வயதிற்கு மேற்பட்டோர் வயது வந்த முதல்வர்கள்

என்ற பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பெண் பிள்ளைகளை சுயமாக இயங்கும் பொறுப்புள்ள பெண்களாகவும், சந்தோஷமும் மனநிறைவும் கொண்ட சூழலை உருவாக்கியவர்களாகவும், யாவற்றுக்கும் மேலாக ஒருவரை ஒருவர் மதித்து சமாதானமாக வாழக் கற்றுக் கொள்ளச் செய்வதுடன் சவால்கள் திட்டம் மூலம் அவர்களை உன்னதமானவர்களாக்குவது இதன் அடிப்படை நோக்கம்.

பெண் சாரணிய அமைப்பில் இணைந்து கொண்டோர் தலைமைத்துவத்தை ஏற்கவும் சமுதாயத்திற்குத் தொண்டு புரியவும் பொறுப்புள்ளவராக வளர்த்தெடுக்கப்படுகின்றனர். அவர்களின் திறமைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, வாழ்க்கையை அமைக்க வழிப்படுத்தப்படுகின்றனர். இளம் பெண்களின் புதிய எண்ணங்களை நெறிப்படுத்தி அவர்களின் செயற்பாடுகளுக்கு வலுவூட்டுவதோடு முழு ஆளுமைக்கும் வேடிக்கையும் மகிழ்ச்சியும் அளிக்கும் செயற்திட்டங்கள் நிறையவே அடங்கியுள்ளன.


**திருமதி கி. சிவராஜா**
பெண்சாரணிய வடமாகாண ஆணையாளர்

# புதிய கம்பனிச் சட்டம்

2007ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதியிலிருந்து 1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் நீக்கப்பட்டு 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டம் அமுல்படுத்தப் படுகிறது. இத்திகதியிலிருந்து 12 மாதத்திற்குள் நடைமுறையிலுள்ள கம்பனிகள் புதிய பதிவைச் செய்யவேண்டும். இதன்போது புதிய உருவாக்கல் பத்திரம் வழங்கப்படும்.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் நன்மைகள் பின்வருவனவாகும்.

1. இலகுவாக கம்பனியை உருவாக்கலாம்
2. இலத்திரனியல் ஆவணங்களைப் பேணமுடிதல்
3. சிறுபான்மைப் பங்குதாரர் நலன்கள் பாதுகாக்கப்பட்டமை
4. கம்பனி பிணக்குகள் சபை அறிமுகம் செய்யப்பட்டமை
5. இயக்குனர் கடமைகள் சட்டரீதியாக வலியுறுத்தப்பட்டுள்ளமை
6. கடனிறுக்க வகையுடமைப் பரீட்சிப்பு அறிமுகம் செய்யப்பட்டமை



புதிய கம்பனிச் சட்டத்தின்படி கம்பனியைப் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்களாக ஆரம்ப பங்குதாரர் ஒவ்வொருவரும் கையொப்ப மிட்ட பதிவுக்குரிய விண்ணப்ப பத்திரத் துடன் கீழ்வரும் நான்கு ஆவணங்களும் இருக்க வேண்டும்.

1. கம்பனியின் அமைப்பு அகவிதி
2. கம்பனியின் பணிப்பாளராகச் செயலாற்றுவதற்குச் சம்மதம் தெரிவித்த கடிதம்.
3. கம்பனியின் செயலாளராகச் செயலாற்றுவதற்குச் சம்மதம் தெரிவித்த கடிதம்
4. கம்பனிப் பெயர் ஏற்கனவே இருந்த கம்பனிப் பெயராக அல்லது அதற்கு ஒத்த பெயராக இருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தும் கூற்று.

**கூட்டிணைப்புச் சான்றிதழ் / உருவாக்கற் பத்திரத்தில் காணப்பட வேண்டிய விடயங்கள்**

1. கம்பனியின் பெயர், பதிவிலக்கம்
2. கூட்டிணைக்கப்பட்ட திகதி
3. வரையறுக்கப்பட்ட கம்பனியா / வரையறுக்கப்படாத கம்பனியா / உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியா என்ற விபரம்.
4. எவ்வகையான கம்பனி - (தனியார் கம்பனியா, கரைகடந்த கம்பனியா, பொதுக்கம்பனியா) என்ற விபரம்.


புதிய கம்பனிச் சட்டத்தின்படி மக்கள் கம்பனி நீக்கப்பட்டு பதிலாக வரையறுத்த கம்பனியாகக் கருதப்படும். புறவிதி ஆவணம் தயாரிக்க வேண்டியதில்லை. புறவிதி அகவிதியின் ஓர் பகுதியாகவே கருதப்படல் வேண்டும். பங்குகளுக்கு முகப்பெறுமதி கிடையாது. கம்பனி விரும்பிய விலையில் பங்குகளை வழங்க முடியும். கம்பனி உபகாரப் பங்கு வழங்கல் மூலம் மூலதனத்தை அதிகரிக்க முடியாது. அதாவது ஒதுக்கங்களை மூலதனமாக்க முடியாது. இச்சட்டத்தின்படி அமைப்பு அகவிதி பின்வருவனவற்றை ஏற்பாடு செய்யலாம்.

1. கம்பனியின் குறிக்கோள்
2. கம்பனியின் பங்குதாரர்களின் உரிமைகளும் கடமைகளும்
3. கம்பனியின் முகாமையும் நிர்வாகமும்

கம்பனி ஒன்று இரண்டுக்குக் குறையாத பங்குதாரர்களைக் கொண்டிருக்கலாகாது. ஆயினும் திறைசேரியின் செயலாளர் அல்லது தனியாள் தன்மையுடைய நிறுவனம் கம்பனியை ஆரம்பிக்கலாம். இதனை ஒற்றைப் பங்குதாரர் கம்பனி என அழைப்பர்.

எனவே மேற்படி சட்டம் பாவனையாளர்களுக்குச் சினேகபூர்வ மானதாகக் காணப்படுகிறது. கம்பனியை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தைச் செய்து பலப்படுத்திக் கொள்ள முடியும்.


**திருமதி சு. கருணாகரன்**



செவ்வாய்க் கிரகத்தில் நீர் இருப்பதாக கருதப்படும் நிலையில் அமெரிக்காவின் ஸ்பிரிட் விண்கலம் பெண் ஒருவர் உட்கார்ந்து இருக்கும் படத்தை அனுப்பி உள்ளது. இது உண்மையானதா அல்லது அங்குள்ள பள்ளத்தின் நிழலா என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

# நூலகம் நாடிப் பயிலுவோம்

இன்றைய உலகம் அறிவுலகம். அறிவே உலகின் பிரதான இயங்கு சக்தியாக உள்ளது. உடல் வலிமை மிக்கவனும், நிலபுலங்கள் முதலிய சொத்துக்களையுடையவனும் உயர்ந்தவனாகவும், அதிகாரம் மிக்கவனாகவும் விளங்கிய நிலமானிய காலம் மலையேறிவிட்டது. இன்றோ அறிவுழைப்பால் முன்னேறியவனே சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உடையவனாகவும், பொருளாதார பலமுடையவனாகவும் உள்ளான். உலகமகா கோடீஸ்வரரான பில்கேட்ஸ் இதற்கு நல்ல உதாரணம். தனது புனைவாற்றலால் உயர்ந்து புதிது புதிதாக மென்பொருள்களை வழங்கும் மைக்ரோசொவ்ற் நிறுவன அதிபராக அவர் உள்ளார்.



அறிவை அளிக்கும் பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் இருந்த போதிலும் அவற்றின் செயற்பாட்டில் நூலகங்களின் பங்கு முக்கியமானதாக இருக்கிறது. தகவல் தொடர் பாடல் தொழிநுட்பம் வளர்ச்சி கண்டுள்ள போதிலும் நூல்களின் இன்றியமையாமை வலுவானதாகவே உள்ளது.

நூல்கள் நமக்கு நல்ல நண்பர்களாக , வழிகாட்டிகளாக, ஆசான் களாக விளங்குகின்றன. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான். கண்டது கற்கப் பண்டிதனாவான் என்ற இரு பழமொழிகளும் வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவனவாக நம்மத்தியில் உள்ளன. நூல் மேயா மனிதன் புல்மேயா மந்தை என்று இன்னொரு மேலை நாட்டுப் பழமொழி உள்ளது. அதுபோலவே நல்ல நூல்களுள்ள சிறுகுடிசை அரண்மனை போன்றது என்றொரு மேலை நாட்டுப் பழமொழியும் நூல்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. நூலளவேயாகு மாம் நுண்ணறிவு என்கிறார் ஔவையார். நமது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள் என்று கூறுகிறார். மேலுள்ள கருத்துக்கள் நூல்களதும் வாசிப்பினதும் இன்றியமையாமையை விளக்குவனவாகும்.

இன்றுள்ள பிரதான பிரச்சினையாக வாசிப்புப் பழக்கமின்மை கூறப்படுகிறது. 1992ஆம் ஆண்டு கல்விச் சேவை ஆணைக்குழுவின் துரித நடவடிக்கைச் செயலணி கல்விப் பிரச்சினைகள் தொடர்பில்

ஆராய்ந்தது. அவ்வாறு ஆராய்ந்த குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் "கல்வித் துறையின் எல்லா மட்டங்களிலும் கல்வியின் மதிப்பளவிலும் தரத்திலும் பாரிய வீழ்ச்சி காணப்படுகிறது. எமது கல்விக் கலாசாரத்தில் நூல் நிலையங்களின் பாவனை, வாசிப்புப் பழக்கம் என்பன முற்றாக அருகிவரும் நிலை காணப்படுகிறது" எனச் சுட்டிக் காட்டியிருந்தது.

அதற்கமைவாக 1999இல் புதிய கல்விச் சீர்திருத்தங்களில் பாடசாலை நூலகங்களை வலுவுள்ளதாக்கி கற்றல் வளநிலையங்களாக ஆக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2007ஆம் ஆண்டு கல்விச் சீராக்கத்தில் ஆரம்ப வகுப்புக்களில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு துணை வாசிப்பு நூல்கள் வழங்குவது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலை நூலகங்களை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். இரவல் வழங்கும் பகுதியினூடாக நூல்களைப் பெற்று வார இறுதி நாள்களில் அவற்றை வாசிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவரும் கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியப் போட்டிகளிலும், பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டும். அவ்வாறு பங்குபற்றுவதற்கு நிச்சயம் நூல்களைத் தேடிப் பயில்வது அவசியமாகும்.

வருங்காலத்தில் ஆரோக்கியமான சமுதாயம் மலர இன்று நூல்களை வாசித்து அறிவால் உயர்ந்த மாணவப் பரம்பரையொன்று உருவாகுவது அவசியமானதாகும். எனவே, மாணவர்கள் தம்மை வளப்படுத்திக் கொள்ள முயலவேண்டும். உலகமேதைகள் எல்லோரது உயர்வின் பின்னால் நூல்களும் நூலகங்களும் இடையறாத வாசிப்பும் உள்ளமையை மறந்து விடக்கூடாது.

**சு. ஸ்ரீகுமரன்**

பாடசாலையின் நவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் மாணவியர் முப்பெருந் தேவியர் போல உடையணிந்தமை சிறப்பானதாகும். ஒவ்வொரு நாளும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் விஜயதசமி அன்று ஏடு தொடக்கல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. சுந்தரசிவம் இதில் கலந்துகொண்டு பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கினார்.



## பொது அறிவுப் போட்டி - 02

01. "அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும்" என்ற நீதி வாக்கியம் யாரால் கூறப்பட்டது?
02. உலகின் மிகப்பெரிய சேவைக் கழகமான அரிமாக் கழகத்தை ஸ்தாபித்தவர் யார்?
03. முதலாம் உலகப்போர் மூள்வதற்குக் காரணமாக ஒரு படுகொலை அமைந்தது. அதில் கொல்லப்பட்டவர் பெயர் என்ன?
04. ஏழைகளுக்கும் நோயாளருக்கும் சேவை செய்வதிலேயே தனது வாழ்நாளைச் செலவழித்து மறைந்த இந்தியாவில் வாழ்ந்த புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பெண்மணி யார்?
05. இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட விமான சேவை நிறுவனத்தின் பெயரென்ன?
06. புகழ் பெற்ற ஒலிவர் ருவிஸ்ட் நூலின் ஆசிரியர் யார்?
07. ரெனிஸ் விளையாட்டின் தாயகமென விளங்கும் நாடு எது? அங்குள்ள புகழ்பெற்ற ஆடுகளத்தின் பெயரென்ன?
08. பாகிஸ்தானில் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் பெண் பிரதமரின் பெயரென்ன?
09. புகழ்பெற்ற குவார்னிக்கா ஓவியத்தை வரைந்த ஓவியரின் பெயரென்ன?
10. தைப்பொங்கலை முதல்நாளாகக் கொண்டு வழங்கப்படும் தமிழ் வருடம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - மார்ச் 05, 2008.**

## பொது அறிவுப் போட்டி 1இற்கான விடைகள்

01) 13,667 தீவுகள் 02) கிரண்பேடி 03) சம்பில்துறை 04) அமெரிக்கமிஷன் 05) அரிச்சந்திரன் நாடகம் 06) திருக்குறள் 07) சுனிதா வில்லியம்ஸ் 08) ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) 09) சுசந்திகா ஜயசிங்க 10) மொடம்

**முழுமையான சரியான விடைகளை எவரும் எழுதவில்லை. அதிக சரியான விடையெழுதிய நால்வர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

01. செல்வன் ச. அபிரக்ஷன் - தரம் 3, பண்டத்தரிப்பு பெண்கள் உ.த. பாடசாலை
02. செல்வி ஜெ. நிருத்திகா - தரம் 3, பண்டத்தரிப்பு பெண்கள் உ.த. பாடசாலை
03. செல்வி திவ்யா ஸ்ரீகாந்தன் - தரம் 8 கொக்குவில் இந்துக் கல்லூரி
04. செல்வி தர்ஷனா சுப்பிரமணியம் - A/L 2009 பண்டத்தரிப்பு பெண்கள் உ.த பாடசாலை

# திருவாளர் தெரியாது

சமாதானம் நிலவி A-9 பாதை திறக்கப்பட்டிருந்த போது யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்கு ஒரு வெள்ளையினத்தவர் வந்திருந்தார். ஒரு விடுதியில் தங்கியிருந்த அவர் மறுநாள் காலை யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்க ஒரு ஓட்டோவில் புறப்பட்டார். முதலில் அவரது கண்களுக்குத் தென்பட்டது யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையாகும். அதைப் பார்த்த அவர் "இதை யார் கட்டியது?"என்று ஓட்டோ ஓட்டுநரிடம் கேட்டார். அதற்கு அவன் "தெரியாது" என்று பதிலிறுத்தான்.

பின்னர் சற்றுத் தள்ளியிருந்த வேம்படி மகளிர் கல்லூரியைப் பார்த்து "இதை யார் கட்டியது?" என்று கேட்டார். அவன் "தெரியாது" என்று பதிலிறுத்தான். சற்றுத் தூரம் சென்றதும் யாழ் மத்திய கல்லூரியும், சுப்பிரமணியம் பூங்காவும், பொதுநூலகமும் எதிர்ப்பட்டன. அவற்றைச் சுட்டிக்காட்டி "யார் கட்டியது" என்று கேட்டார். ஓட்டுநர் "தெரியாது " என்றே கூறினான். இவ்வாறே அவர் கேட்டதற்கெல்லாம் தெரியாது என்று அவன் கூறினான். தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பி வரும் போது ஒரு மரண ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. "யார் இறந்தது?" என்று அவர் கேட்டார். அவன் வழக்கமான பதிலையே கூறினான். அவன் மறுநாள் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார். தனது சொந்த நாட்டையடைந்த வெள்ளையினத்தவர் பத்திரிகையில் இவ்வாறு எழுதினார். "யாழ்ப்பாணத்தில் தெரியாது என்ற சிறந்த மனிதர் இருந்தார். அவர் பல பாடசாலைகளை, மருத்துவமனையை, நூலகத்தை இன்னும் பல பொது நிறுவனங்களைக் கட்டியுள்ளார். அவர் அண்மையிற்தான் காலமானார். அவரது மரணச் சடங்கில் நானும் கலந்து கொண்டேன்".

சொன்னவர் : **திரு ஆ.சி. நடராஜா**

(பரிசளிப்பு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது)

பாடசாலையின் ஆங்கிலக் கண்காட்சி 19-11-2007 அன்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி கி. சிவராஜா அவர்கள் கண் காட்சியை ஆரம்பித்து வைத்தார்.



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் பண்மகள்
சஞ்சிகை வெளியீட்டிற்கு எமது வாழ்த்துக்கள்

**எமது பிரதேச மக்கள் பயன்பெறும் வகையான எமது சேவைகள்**



- நுகர்ச்சி விநியோக சேவை
- விவசாய கடன் சந்தைப்படுத்தல் சேவை
- பாண், பணிஸ் உற்பத்தி
- சுத்தமான தரமுள்ள நல்லெண்ணெய் உற்பத்தி
- தொலைபேசி சேவை
- ஒப்பந்த சேவை
- அங்கத்தவர்களுக்கு சுயமுற்சிக் கடன் வழங்கல்






**பண்டத்தரிப்பு பரிஷ்**
**ப.நோ.கூ. சங்கம்**



பாடசாலையின் ஒளிவிழா 05-12-2007 அன்று கிறீஸ்தவ மன்றத் தலைவி தே. மேரிஷாளினி தலைமையில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக அருட்பணி ப. யேசுரட்ணம் அடிகளார் அவர்களும், சிறப்பு விருந்தினராக அருட்பணி அ. ஜெயக்குமார் அடிகளார் அவர்களும் கலந்து கொண்டனர். பாட சாலை அதிபர் திருமதி கி. சிவராஜா வாழ்த்துரை வழங்கினார்.

Dr. T. KALAMANY EdD (Aus)
Senior Lecturer, Dept. of Ed.
UNIVERSITY OF JAFFNA

# நினைவு கூரலும் பண்மகள் வெளியீடும்



திரு. சு. சுந்தரசிவம்

கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்

திருமதி கலைவாணி சுந்தரசிவம் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்கிறார்.

திரு. க. சின்னத்தம்பி

திரு. அழ. பகீரதன்

எமது முன்னாள் அதிபர் அமரர் போஷேந்திரா தேவி கந்தசாமி அவர்களது நினைவுகூரல் நிகழ்வும், பண்மகள் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும் 2007, ஒக்ரோபர் 18 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் திருமதி கி. சிவராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையை திருமதி மா. ரவியேந்திரன் நிகழ்த்தினார். முன்னதாக ஊர்வலமாக ஏடுத்துவரப்பட்டு, அலங்கரிக்கப்பட்டு மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர் போஷேந்திராதேவி அம்மையாரின் திருவுருவப் படத்தை பிரதம விருந்தினர்களில் ஒருவரான திருமதி கலைவாணி சுந்தரசிவம் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து நினைவுரைகளை ஆசிரியர் தி. தீபன் அவர்களும், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சண்முகசுந்தரம் அவர்களும், பிரதம விருந்தினரான வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. சுந்தரசிவம் அவர்களும் நிகழ்த்தினர். பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க ஊழியரும் பழைய மாணவியுமான திருமதி அ. ஜெனிற்றா அவர்கள் கவிதையால் அமரரைப் போற்றினார். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்கள் எமது பாரம்பரியத்தில் பெண்களுக்கான கல்வியின் சமகாலப் போக்கு ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றினார்.

தொடர்ந்து இடம்பெற்ற பண்மகள் சஞ்சிகை வெளியீட்டு விழாவை திரு. பொ. அமிர்தலிங்கம் அவர்கள் நெறிப்படுத்தினார். அறிமுகவுரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. க. சின்னத்தம்பி அவர்களும், வெளியீட்டுரையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. சுந்தரசிவம் அவர்களும், மதிப்பீட்டுரையை காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளரும் கவிஞருமான அழ. பகீரதன் அவர்களும் பதிலுரையை சஞ்சிகையின் ஆசிரியர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்களும் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியை முன்னாள் ஆசிரியை திருமதி கா. இன்பநாதன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.